REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர். அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 10உ சனி (25—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 11உ ஞாயிறு (26—12—54) [இதழ் 167

அடிப்படை உரிமைகள் குறித்து 674 வழக்குகள்

புதுடில்லி, டிச. 24—

இந்தியத் தலைமை உயர் நீதிமன்றத்தின்முன், அடிப்படை உரிமைகள் பற்றிய வழக்குகள், இந்த ஆண்டு நவம்பர் இறுதி வரை 674 வந்தன என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

டாக்டர் கட்ஜு தாக்கல் செய்த அறிக்கையின்படி, 1958-ல் மட்டும் சுமார் 470 வழக்குகள் அடிப்படை உரிமைப் பிரச்சினை பற்றியதாக, தலைமை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்டளையை கட்டுப்பாடாக மீறினர்

உத்தரவை மதியாது உப தலைவர் தேர்தல்

தமிழ் நாடு காங்கிரசிற்குத் தலைவலியும்—திருகுவலியும்!

வட ஆற்காடு மாவட்டக் கழகக் காங்கிரஸ் கட்சியின் போக்கு

வேலூர், டிச. 25—

வட ஆற்காடு மாவட்டக் கழகத்தின் சிறப்புக் கூட்டம் தலைவர் டி. பி. கேசவ ரெட்டியார் தலைமையில் 22-ந் தேதி கூடியது. துணைத் தலைவராக, போட்டியின்றி, காங்கிரஸ் கட்சியினரான திரு. எம். வி. நாகப்ப முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

த. நா. கா. கமிட்டி, அதிகாரபூர்வமாகத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்திய திரு. சந்திரசேகர நாயகரை, தற்பொழுது தலைவராக இருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டி. பி. கேசவ ரெட்டியார், தலைவர் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்கடித்ததின் எதிரொலியாக, மேற்படி ரெட்டியாரையும், மேலும் மூன்று காங்கிரஸ் கட்சி மாவட்டக் கழக உறுப்பினர்களையும் பதவியை விட்டு விலகும்படியும், துணைத் தலைவர் தேர்தலை நடத்தக்கூடாது எனவும், த. நா. கா. க. கட்டளையிட்டிருந்தது. அக்கட்டளையை மீறும் நிலையிலேயே மேற்படி துணைத் தலைவர் தேர்தல் நடைபெற்று இருக்கிறது.

துணைத் தலைவர் தேர்தலை நடத்துவதற்கெனக் கூட்டப்படும் சிறப்புக் கூட்டத்தில் வேறு நிர்வாக விஷயங்களைக் கவனிக்கக் குறிப்பிடக்கூடாது என விதி கூறுவதாகவும், அவ்விதிக்கு மாருக நடக்கும் இக்கூட்டம் செல்லத்தக்கது அல்ல என அதிகாரபூர்வமாகத் தலைவர் தேர்தலில் நிறுத்தப்பட்டுத் தோற்றுப்போன திரு சந்திரசேகர நாயகர், கூட்டத் துவக்கத்தில் ஒரு ஆட்சேபணையை எழுத்துமூலம் தலைவரிடம் கொடுத்தார். அம்மனுவில், மொத்தம் 15 காங்கிரஸ் மாவட்டக் கழக உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருந்தனர்.

அவ்வாட்சேபணையைத் தலைவர் புறக்கணித்துவிட்டு, துணைத் தலைவர் தேர்தலை நடத்த முன்வந்தார். ஆட்சேபணை எழுப்பிய 15 காங்கிரஸ் உறுப்பினர்களும் தேர்தலில் கலந்துகொள்ள முடியாது என மறுத்துவிட்டனர்.

துணைத் தலைவர் தேர்தலுக்கு போட்டி இல்லாததினுல், போட்டியின்றி துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக, தலைவர் அறிவித்தார்.

"தமிழ்ப் பாட்டு மட்டுமே வேண்டும்"

"பிற மொழிப் பாட்டுகள் வேண்டவே வேண்டாம்"

தமிழர் மறுமலர்ச்சி பற்றி முதல் அமைச்சர் யூகம்

ஆதிக்க வகுப்பினர் பிடிவாதத்திற்குக் காமராஜர் கண்டனம்

"சமுதாயத்தின் உயர்ந்த இடத்தில் வீற்றிருக்கும் மக்கள், அவ்விடத்திலிருந்து உருவாகிற நல்விளைவுகள் எந்த ஒரு வகையிலும் குறைவதற்கு, பொ[illegible]ஒருப்பட மாட்டார்கள் என்பது, சாதாரண அனுபவத்தைப் பொருத்த விஷயமாகும். பொருளியல், சமூக இயல், அரசியல் ஆகிய துறைகள் அனைத்துக்கும், இது, பொது உண்மையாகும். தங்கள் நலன்களை, ஆளுங் கூட்டம், போராட்டமின்றி விட்டுக்கொடுத்ததில்லை என்பதை வரலாறு வலியுறுத்துகிறது. அதுபோன்றே, இதற்கும் (தமிழ் இசைக்கு) ஒரு போராட்டம் தேவைப்பட்டது."

"ஆங்கில மொழியில் பேசுவதுதான் நியாயமானது எனக் கொள்ளப்பட்ட காலம் ஒன்று இருந்தது. விடுதலை கிடைத்ததின் காரணமாக, இன்று, அந்நிலை மாறியிருக்கிறது. அப்பழக்கத்தைத் தவருகக் காப்பாற்ற வேண்டுமென விருப்பம் கொண்டிருக்கின்ற அவர்கள், தங்கள் இருதயபூர்வமாக இப்பொழுது என்ன என்னுவார்கள் ?"

"பாமர மக்கள் அறிந்திருக்காத—ஆங்கிலக் கல்வியறிவின் பயனுக தாங்கள் பெற்றுள்ள புலமையினுல், அதன் வசதிகளையும் தங்களிடமே என்றென்றைக்கும் முடக்கி வைத்திருப்பது முடியும் என்றே அவர்கள் கருதுவர். இசைத் துறைக்கும், இதுவேதான் காரணம். இசைத் துறையில் திறமை பெற்றிருந்தவர்கள், அதைத் தாங்கள் மட்டுமே பெற்றவர்களாக இருக்கவும், சொந்த நலத்திற்காக அதைத் தங்களிடமே முடக்கி வைக்கவும் விரும்பினர்."

"'எங்களுக்குத் தமிழ்ப் பாட்டுகள் மட்டுந்தான் வேண்டும்; பிற மொழி பாட்டுகளை நாங்கள் வேண்டோம்,' என மக்கள் சொல்லும் காலம் வரத்தான் போகிறது."

"தங்களுடைய சிறப்பு நலன்களை இழக்க நேரிடுமோ என அஞ்சுகிற நபர்கள், இம்மறுமலர்ச்சியை எதிர்ப்பதில் வியப்பொன்றுமில்லை."

—இவ்வாறு, 12-வது தமிழ் இசை மாநாட்டினைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சென்னை முதன் மந்திரி காமராசர் குறிப்பிட்டிருக்கிருர்.

"நீண்டகாலப் போராட்டத்திற்குப் பின்தான் தமிழ் இசை வெற்றி பெற முடிந்தது,"

என்று, திரு. ரத்னசபாபதி (முதலியார்) வரவேற்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதற்கு விளக்கம் தரும் வகையில், அவர், மேற்கண்டவாறு கூறினர்.

அதற்கு முன் அவர், 'தமிழ் நாட்டில் தமிழுக்காகப் போராட்டம் ஏன் என்று கேட்கப்படலாம்; அதற்கான விளக்கம், திரு. புருஷோத்தம (முதலியார்) வரவேற்புரையிலேயே உள்ளது' என்றும் கூறினர்.

திட்டத்தில் சேர்க்கிருர்களாம்!

சென்னை, டிச. 24—

திருநெல்வேலியையும் —கன்யாகுமரியையும் இணைக்க ஒரு புதிய இரயில்பாதை; சேலம் — பெங்களூருக்கிடையே ஒரு இணைப்புப் பாதை; மற்றும் சில சிறிய புதிய பாதைகள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவிருக்கும் பட்டியலில் இடம் பெறும் என முதன் மந்திரி காமராசர் அறித்திருக்கிருர்

எம். ஆர். இராதாவின் சிறைவாசம் நீடிப்பு

சென்னை, டிச 24—

திருச்சியில் தனது 'இராமாயண' நாடகத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் 144 தடையை மீறி நாடகம் நடத்தப்போவதாக அறிவித்ததை யொட்டி கடந்த 13-ந் தேதி கைது செய்யப்பட்ட நடிகத் தோழர் எம். ஆர். இராதாவின் சிறைவாசத்தை மேலும் 7 நாட்களுக்கு நீடிக்கும்படி திருச்சி நகர நீதிபதி உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

ம. சோ. கட்சிக்கு இரு மக்கள் சபை உறுப்பினர்கள் தலைமுழுக்கு

காங்கிரசை கட்டித் தழுவ முடிவு

புதுடில்லி, டிச. 24—

இந்திய மக்கள் சபை உறுப்பினர்களான கே. சூர்யநாராயணு, பி. எஸ். மூர்த்தி என்ற இருவரும், தாங்கள், மா. சோ. கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளனராம்

"அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், ஆந்திராவில், காங்கிரஸ், பிரஜா, கிருஷிக் லோக் கட்சிகளின் கூட்டு முன்னணித் திட்டத்துடன் ம. சோ. கட்சியையும் சேர்த்து, குழந்தை நிலையிலுள்ள ஆந்திர மாநிலத்தில் ஒரு உறுதியான அரசாங்கம் அமைப்பதற்கு தாங்கள் கருத்துக்கொண்டமுயற்சி தோல்வியுற்றுவிட்டதாயும், எனவே, ம. சோ. கட்சியைவிட்டு, மக்கள் சபை நடவடிக்கைகள் உட்பட எல்லாவகையான பொறுப்பிலிருந்தும் தாங்கள் விலகிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறியிருக்கின்றனர்எனத் தெரிகின்றது.

ம. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டம் தலைவர் ஆச்சார்ய நரேந்திர தேவ் தலைமையில் நடைபெற்றுள்ளது. அப்போது, மணிப்பூரில் நடைபெறும் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை வலுப்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. மேலும், ஆந்திர ம. சோ. கட்சித் தலைவரான சூர்யநாராயணுவின் ராஜிஞமாவை ஏற்றுக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டதாம்.

மதுரை நகரசபை தலைவர் ராஜிஞமா

காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்பின் எதிரொலி

மதுரை, டிச. 24—

தமிழ் நாடு காங்கிரஸ் குழுவிற்கு தனது இராஜிஞமா கடிதத்தை அனுப்பியுள்ளதாக மதுரை நகர சபைத் தலைவர் ஏ. சிதம்பர முதலியார் கூறியுள்ளார்.

தன்மீது சில நகரசபை உறுப்பினர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையல்லவென்றும், தான் இராஜிஞமா செய்தால் அப்பதவியைக் கைப்பற்றலாமே என்ற நோக்கத்துடன்தான் இப்படிப் பலர் கூறுகிருர்கள் என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறுகிருர்.

திரு. சிதம்பர முதலியார் சென்னை மேல்சபை உறுப்பினராவார். இரண்டு பதவிகளில் ஒன்றை அவர் இராஜிஞமா செய்ய வேண்டுமென்று தமிழ் நாடு காங்கிரஸ் கூறியது.

சமீபத்தில், மதுரை நகரசபை காங்கிரஸ் உறுப்பினர்களில் 18-பேர், தலைவரை இராஜிஞமா செய்யுமாறு உத்தரவிடக் கோரி, தமிழ்நாடு காங்கிரஸ் குழுவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பினர்.

மதுரை நகரசபை காங்கிரஸ் கட்சிக்கூட்டத்திலும் இதுபோன்ற தீர்மானம் ஒன்று நிறைவேறியதாம்,

ரஷ்ய உதவியுடன் அமைக்கும் எஃகு தொழிற்சாலை

சென்னையில் ஆரம்பிக்க சர்க்கார் கோருகிறது

புதுடில்லி, டிச. 24—

சோவியத் நிபுணர்களின் உதவியுடன் ஆரம்பிக்கும் புதிய இரும்பு—எஃகுத் தொழிற்சாலையை சென்னை மாகாணத்தில் ஆரம்பிக்குமாறு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கிறதாம்.

இச் செய்தியை இந்திய உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

ஈரான் மன்னரின் யோசனை!

பாரசீக மன்னர், ஈரானில், அரசியலை இராணுவத்தின் துணையுடன் கட்டுப்படுத்தி நடத்த எண்ணியிருப்பதாக நேற்றிரவு இங்கு கூறினராம்.

கேந்திரமான இடத்திலிருக்கும் தனது நாடு மேற்கத்திய நாடுகளின் தரப்பில் இருக்கும்வரை அவ்விதம் செய்யப் போவதாக அவர் கூறியிருக்கிருர் என்றுலும், இராணுவம் உள்நாட்டு அரசியலில் நேரிடையாக ஈடுபடாவண்ணம் தானே வழிகாட்டுவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்.. அண்ணதுரை

சென்னை 25—12—1954 சனி

பெங்களூர் மாநாடு

தென்னாட்டு மக்களுக்கு—திராவிடர்களுக்கு — தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி வழங்கும் மக்கட்கு, நிரந்தரமானதொரு விடுதலை வாழ்வைப் பெற்றுத் தருவதற்காக, 'என்றும் எமை இந்த வடவர் அடக்கி ஆண்டதில்லை—இன்றுமட்டும் எப்படி ஆளலாம்?' என்ற விழிப்புணர்வு கொண்ட திராவிடர்களால், 'பொறுத்தது போதும்; இனி அறுத்தே தீருவோம் அடிமைத் தளையை,' என்று சூளுரைக்கும் இலட்சிய வீரர்களைக் கொண்டு ஜனநாயக ரீதியாக இயங்கி வரும் விடுதலை இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது நாடறிந்த உண்மை.

தி. மு. கழகம், நாம் குறிப்பிடுகிற நான்கு மொழி வழங்கும் பகுதிகளிலும் ஓங்கி வளராவிடினும், தமிழ் நாட்டில் ஆல் போல் தழைத்திருக்கிறது—அருகு போல் வேர் விட்டிருக்கிறது—ஆயிரத்திற்கும் அதிகமான கிளைகளுடன்—லட்சத்திற்கும் மேற்பட்ட இலட்சிய வீரர்களைக் கொண்டு!

அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் ஆங்காங்கேயுள்ள கிளைக் கழகங்கள் புரிந்துள்ள பணிகளை எண்ணிப் பார்க்கவும், நடந்து வந்த பாதையில் நாம் பெற்ற அனுபவங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளவும், மேலும் நம்மை எதிர்நோக்கியிருக்கும் இலட்சியபுரிப் பயணத்தைத் தொடர்ந்து நடத்த திட்டங்கள் தீட்டவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கிளைக் கழகங்கள் ஒன்றுகூடி ஆலோசித்து முடிவுகள் மேற்கொள்ளுவது-அதற்கான வாய்ப்புத்தான் மாவட்ட மாநாடுகள். அவை கழகத்தில் கமழும் ஜனநாயக மணத்திற்கும் ஒரு எடுத்துக் காட்டு.

அந்த வகையில் தமிழ் மாநிலமெங்கும் உள்ள மாவட்டங்களில், எல்லா மாவட்டக் கழகங்களும் மாநாடுகளைச் சிறப்புற நடத்திவிட்டன-மதுரையைத் தவிர-அதுவும் அண்மையில் நடைபெற இருக்கிறது.

இதற்கிடையில்தான், கர்நாடகப் பகுதியில் உள்ள தி. மு. கழகத் தோழர்கள், பெங்களூரில் மாநாடு கூட்டியுள்ளனர். அந்த மாநாடுகள் 1955-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1, 2-ம் நாட்களில் நடைபெற இருக்கின்றன.

இந்த மாநாடுகள், கடந்த டிசம்பர் 18, 19-ந் தேதிகளிலேயே நடைபெற்றிருக்க வேண்டியவை; இரு வாரங்கள் ஒத்திப் போடப்பட்டு இப்போது நடைபெறுகின்றன. காரணம், பெங்களூரில் உள்ள பட்டு ஆலை ஒன்றில் தொழிலாளர்கள் சிலர் நிர்வாகிகளைத் தாக்கினராம். அதையொட்டி ஆலை மூடப்பட்டது. பின் சர்க்கார் தலையீட்டின்பேரில் ஆலை திறக்கப்பட்டாலும், நிர்வாகிகளைத் தாக்கிய குற்றத்திற்காகவென்று கூறி, சுமார் 50 பேர்களை வேலையிலிருந்து நீக்கினர்களாம்; அதை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டம் துவங்கினர்; வேலைக்குப் போவோரை வேண்டாமென்று கூறி, தொழிலாளர்கள் மறியலில் ஈடுபட்டிருந்தனர். விளைவு, நகரில் 144 தடையுத்தரவு பிரகடனப்படுத்தப்பட்டதுதான்! அதனுல்தான், மாநாடுகள் குறித்த காலத்தில் நடைபெருது போயின.

என்றுலும்—சில ஆயிரம் ரூபாய் நஷ்டமேற்பட்டும்கூட, கழக வளர்ச்சியில் கண்ணையும் கருத்தையும் செலவிட்டுவரும் கர்நாடகப் பகுதி தி. மு. கழகத் தோழர்கள், 'எடுத்ததை முடித்தே தீருவோம்' என்ற உறுதியுடன், வரும் ஜனவரித் திங்களில் மாநாடுகளை நடத்துகின்றனர்.

'வட நாடாவது, தென்னுடாவது,' என்று பேசியவர்கள் எல்லாம்—இந்த நாட்டு மக்களின் நல்வாழ்விலே உண்மையான அக்கரை கொண்டவர்கள் எல்லாம்—வடநாட்டிற்கும் தென்னுட்டிற்குமுள்ள தொடர்புபற்றிப் பேசித்தாகுக வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து வருகிருர்கள்—நமது இடைவிடாத பணி, அவர்களை அவ்வாறு உணரச் செய்திருக்கிறது.

அகில இந்திய தொழிற்சங்கக்காங்கிரஸ் தலைவர்தான் திரு. சக்கரை செட்டியார்; அவர், இரண்டொரு தினங்களுக்கு முன்பு சென்னை மேல்சபையில், வடநாட்டுக்குத் தென்னுடு அடிமைப்படுத்தப்பட்டுள்ள அவலநிலை குறித்து பேசியுள்ளார்; பேசாதவர்—பேசக்கூடாதவர் என்று கூடச் சொல்லலாம்—பேசி இருக்கிருர் நமது இலட்சியத்தைப் பற்றி!

பண்டித நேரு-நம்மை பழித்தும் இழித்தும் வசைச் சொற்களால் பேசி வந்தவர்-இன்று பேசுகிருர்—'தென்னுட்டவர் வட நாட்டவரால் அடக்கி ஆளப்படுவதாக அஞ்சுகின்றனர்; அதன் எதிரொலியே 'இராமாயண'ங்களும், 'மகாபாரதங்'களும் கேலிச் சித்திரங்களாக்கப் படுகின்றன'— என்று!

நம்மை ஏசியவர் இன்று பேசுகிருர்—நம் லட்சியம் குறித்து உபதேசிக்கிருர்—அவருடைய இனத்தவருக்கு—வடநாட்டவர்களுக்கு!

இப்படி, பேசாதவர்கள் எல்லாரும் பேச ஆரம்பித்துள்ளனர்—நம்மைப்பற்றி; நம் நாட்டைப்பற்றி, நம் லட்சியத்தைப் பற்றி!

பொன் விளையும் தென்னுடு சாக்காடாவதையும், வரண்ட வடநாடு பூக்காடாவதையும் நாட்டவர் அறிய ஆரம்பித்து விட்டனர்.

ஆந்திரன் ஆதரிக்கிருனு? கன்னடன் கருதுகிருனு? கேரளத்தான் கேட்கிருனு?—என்றெல்லாம் கேலி பேசியவர்களின் குரல், இன்று எங்கோ ஒரு மூலையில் இருந்து வரும் முணுமுணுப்பாகி விட்டது; நமது லட்சியக் குரல் ஒலித்தவண்ணமுள்ளது; ஓங்கி வளர்ந்தவண்ணமுள்ளது.

'திராவிட நாடு திராவிடருக்கே,' எனும் உரிமைக் குரல்—இலட்சிய கீதம்—வாழத் துடிப்போரின் இதய ஒலி—இதோ கன்னடத்திலே—'நாங்கள் மொழியால் கன்னடியர்தான்; என்றுலும் இனத்தால் திராவிடர்தான்,' என்பதை உணரத் துவங்கிவிட்டோம் என்பதை எடுத்துக்காட்டுவதாய் அல்ல—கேலி பேசுவோருக்கு இடித்துக் காட்டுவதாய் ஒலிக்கிறது—ஜனவரி 1, 2-ல் நடைபெறவிருக்கும் மாநாடுகள் மூலமாய்!

ஐதராபாத் மாநிலத்தில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் திறக்கப்பட்டது

ஐதராபாத் மாநில மராமத்து மந்திரி டாக்டர் ஜி. எஸ். மெல்ஹோதி ஐதராபாத் மாநிலத்தின் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தைத் துவக்கி வைத்துள்ளார்.

'ஷாந்திகனி' என்று பெயரிடப்பட்டுள்ள அந்தச் சுரங்கத்தில் 1956-ல் உற்பத்தி துவங்குமென்றும் அப்போது அங்கு 1,000-பேருக்கு வேலை கிடைப்பதுடன் மாதம் ஒன்றுக்கு 20,000 டன் நிலக்கரி உற்பத்தியாகுமென்றும் கூறப்படுகிறது.

இந்தச் சுரங்கத்தின் பரப்பளவு சுமார் 600 ஏகராம்.

கடந்த ஒரு மாதத்திற்குள் அவர் திறந்து வைத்துள்ள இரண்டாவது நிலக்கரிச் சுரங்கமாகும் இது.

கோத்தகுடம் என்ற இடத்தில் முன்பு துவக்கப்பட்ட சுரங்கத்தில் தினம் 1,000 டன் நிலக்கரி உற்பத்தியாகுமெனசொல்லப்படுகிறது.

"கடின உழைப்பை மக்கள் 'தட்டிக்கழிக்கின்றனர்'"

தொழில் நிபுணர் விஸ்வேஸ்வரய்யாவின் புதிய 'புதிர்'!

பெங்களூர், டிச. 24—

"அமெரிக்கா, மற்றும் இதர நாடுகளுடைய பொருளாதார முன்னேற்றம் அந்த நாட்டு மக்களின் கடுமையான உழைப்பைப் பொறுத்தே இருந்தது. இந்தியாவில் நிலைமைகள் அதற்கு நேர் எதிராக உள்ளன.

"இந்த நாட்டில் மக்கள் கடுமையான உழைப்பைக் கண்டு அஞ்சுகிருர்கள். எவ்வளவு சிறிதளவு வேலை செய்ய முடியுமோ அவ்வளவு மட்டும் வேலை செய்துவிட்டு கடினமாக உழைப்பதைத் தட்டிக் கழித்துவிடுகின்றனர்: கடினமாக உழைப்பதும், சிறந்த பணி புரிவதும் தேசப் பற்றுமிக்க கடமையாகும். அப்படி உழைப்பது தனிப்பட்டவருக்கு மட்டுமன்றி நாடு முழுமைக்கும் நல்ல பலனைத்தரும்,"

—இவ்வாறு கிராமத் தொழிலபிவிருத்தித் திட்டத்தின் கர்த்தாவான டாக்டர் எம். விஸ்வேஸ்ரய்யா அந்தத் திட்டத்திலீடுபட்டிருக்கும் அதிகாரிகளின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"அதிக உற்பத்தி இன்றேல், மக்களின் பொருளாதார நிலை உயராது. அதிக உற்பத்திக்கு, மக்கள் கடினமாக உழைத்தாக வேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

கடந்த 1950-ம் ஆண்டு பிற்பகுதியில், டாக்டர் எம். விஸ்வேஸ்வரய்யா அவர்களால் மைசூர் மாநிலத்தில் உள்ள கோலார், பெங்களூர் மாவட்டங்களில் இந்தக் கிராமத் தொழில் அபிவிருத்தித் திட்டம் புகுத்தப்பட்டது.

1952 அக்டோபரில், இத்திட்டம், மந்தியா மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது. இப்போது இத்திட்டம் மாநிலம் முழுவதும் அமுல் செய்யப்படுகிறது.

இதுவரை, இத்திட்டத்திற்காக மாநில அரசாங்கம் சுமார் 12 லட்சம் செலவிட்டுள்ளது. பங்குத் தொகைகள், சந்தாத் தொகைகள் மூலமாக மக்களும் ரூ. 8,40,000-தந்துள்ளனர்.

கிராமப்புறங்களில் இத்திட்டத்தின்படி ஏராளமான புதிய சிறிய தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள தொழில்களில் பெரும் பகுதி விரிவு படுத்தப்பட்டும் அபிவிருத்தி செய்யப்பட்டும் உள்ளன என்று தெரிகிறது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்க வேலை

60 கோடி ரூபாய் செலவாகுமென பிரிட்டிஷ் நிபுணர் மதிப்பீடு

சென்னைத் தொழில் வளத்தைப் பெருக்கும்; காமராசர் ஒப்புகிருர்

தோண்டி எடுப்பது பற்றி மத்திய அரசாங்கம் முடிவு செய்யுமாம்

"தென்னுற்காடு மாவட்டத்தில் நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைத் தோண்டியெடுக்க ரூ. 60 கோடி செலவாகக்கூடும்"

என்று அங்கு ஆராய்ச்சி நடத்திய பிரிட்டிஷ் நிபுணர் குழு மதிப்பிட்டிருப்பதாயும், நிபுணர் குழுவின் அறிக்கையை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருப்பதாயும் முதன் மந்திரி காமராசர் கூறியிருக்கிருர்.

மாநில அரசாங்கத்தின் ஆலோசனையுடன் திட்டத்தை அமுல் செய்வது குறித்து மத்திய அரசாங்கம் முடிவு செய்யுமெனக் கூறப்படுகிறது.

நிலக்கரி தோண்டி எடுக்கப்படுவதற்கு, முதன் முதலில் ஏராளமான தொழில் நுணுக்க விற்பன்னர்களும் அனுபவம் பெற்ற அதிகாரிகளும் ஆரம்ப வேலைகளைத் துவங்கத் தேவைப்படுவர் என்றும், இந்தியர்களில் அத்தகு வேலைகளைச் செய்வதற்குப் போதுமான அளவு தொழில் நுணுக்கக் கல்வி பெற்றவர் தொகை அதிகரிக்கும் வரையில் அந்த அயல் நாட்டவரின் பணி தேவைப்படும் என்றும் தெரியவருகிறது.

இவைபற்றி டெல்லி சர்க்கார் காரியாலய அதிகாரிகள் மாநாடு ஒன்று வரும் டிச. 27-ந் தேதி நடைபெறும் என்றும் அதில் மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கலந்துகொள்வார் என்றும் முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிருர்.

பிரிட்டிஷ் நிபுணர் கருத்துப்படி நெய்வேலிச் சுரங்க வேலை மிகப் பயனுள்ளதாயிருக்குமெனவும், இது துவங்கப்பட்டால், சென்னை மாநிலத்தில் தொழில் அபிவிருத்தியடைய வசதியாயிருக்குமெனவும் காமராசர் ஒப்பியுள்ளார்.

'நான் உனது முதல் நண்பன்!'

பாகிஸ்தானின் அமெரிக்க மோகம்

லாஸ்எஞ்ஜல்ஸ், டிச. 22—

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு அளிக்க ஒப்புக்கொண்டுள்ள இராணுவத் தளவாடங்களின் உதவி மிகவும் தாமதமாகவே அளிக்கப்படுகிறதாம்.

இச்செய்தியை ஐ. நா. சபையிலுள்ள பாகிஸ்தான் தூதுக் குழு உறுப்பினரான முகமதுகான் கூறியுள்ளார்.

"கிழக்கில், பாகிஸ்தான், அமெரிக்காவின் முதல் நண்பனுகும்; சுதந்திர உலகில், பாகிஸ்தான், கம்யூனிசத்தை எதிர்த்து நிற்கிறது; கம்யூனிஸ்டுகளின் அச்சுறுத்தலை எதிர்த்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி தேவைப்படுகிறது,"

என்று, அவர் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

சூடான் அமைச்சர்கள் மூவர் 'டிஸ்மிஸ்'

எதிர்க்கட்சியில் சேருவதாக பயமுறுத்தினர்களாம்

சூடான் பிரதம மந்திரி இஸ்மாயிலின் வேண்டுகோளின்படி, சூடான் கவர்னர்-ஜெனரல் மூன்று அமைச்சர்களை 'டிஸ்மிஸ்' செய்துள்ளார்.

கல்வி அமைச்சர், உள்நாட்டு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் இவர்களே 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவர்கள்.

மந்திரி சபையிலிருந்து சில அமைச்சர்களை, பிரதம மந்திரி 'டிஸ்மிஸ்' செய்யவேண்டுமென்றும், இல்லையேல், சர்க்காரின் எதிர்க்கட்சியான உம்மா கட்சியில் சேர்ந்துவிடுவதாகவும் இம்மூவரும் பயமுறுத்தினர்களாம். இக்காரணத்தினுலேயே இவர்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டார்களெனக் கூறப்படுகிறது.

செக். நாட்டில் தொழில் மாற்றம்

செக்கோஸ்லாவேகியாவில் அடுத்த மூன்றுண்டுகளுக்குள்ளாக 3,20,000 பேரை பண்ணை வேலைகளில் ஈடுபடுத்த சர்க்கார் முடிவு செய்திருப்பதாக செக். கம்யூனிஸ்டு இதழ் குறிப்பிட்டுள்ளது.

விவசாய வேலைகளில் ஈடுபடுத்தப்படும் அந்த புதிய விவசாயிகள், இதுவரை வேறு பல துறைகளில் தொழில் புரிந்து கொண்டிருந்தவர்கள்; அவர்களில் 1,000 பேர் ஓய்வு பெற்றவர்களும்கூட என்று அந்த இதழ் கூறியிருக்கிறதாம்.

பெங்களூர் மாநாடுகள் ஜன. 1, 2-ல்!

மேற்கு வங்க சர்க்காரின் நில சீர்திருத்தம்

தனி நபர் 30 ஏகர் நிலம் வைத்துக் கொள்ள அனுமதி

ஜமீன்தாரி ஒழிப்பிற்குப் பின்னர் மேற்கு வங்க சர்க்கார் நிலச் சீர்திருத்த முயற்சிகளில் இறங்கியுள்ளனர் என்று தெரிகிறது. இதற்கான மசோதா ஒன்று சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

நிலத்தின் மீது விவசாயிக்கு உள்ள உரிமை, நிலப்பரப்பிற்கான எல்லைகள் நிர்ணயம், உற்பத்தியைப் பகிர்ந்துகொள்ளும் முறை, சிறு நிலப்பரப்புகளை ஒன்று சேர்ப்பது போன்ற எல்லாப் பிரச்சினைகளையும் அந்த மசோதா தீர்க்க முற்படுமென்று தெரிகிறது.

சர்க்கார் 30 எக்கர் நிலத்தை அதிகபட்ச எல்லையாக நிர்ணயிக்குமென்றும், முப்பது எக்கருக்கு மேல் உள்ள நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளுமென்றும், மார்க்கெட் நிலவரப்படி நஷ்டஈடு அளிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

நிலம் வைத்திருப்போர் உண்மையான விவசாயி இல்லையென்றால், அந்த நிலம் முழுவதையும் சர்க்கார் தனது உடைமையாக்கிக்கொள்ளும்.

இந்த மசோதா நிறைவேறிய பின்னர், விவசாயி தனது நிலத்தை உள் குத்தகைக்குவிட அனுமதிக்கப்படமாட்டாது; நிலத்தை அடகு வைப்பது பற்றியும் கட்டுப்பாடு செய்யப்படும்.

பண்ணையாள் முறை அனுமதிக்கப்படும் என்றும், 60—40 என்ற விகிதத்தில் உற்பத்தி பங்கிடப்படும் என்றும் தெரிகிறது.

கூட்டுறவு பண்ணை முறையை அமுல் நடத்த மசோதாவில் இடம் இருக்கிறது.

பொருளாதாரப் பலன் அளிக்காத நிலப்பரப்பை வைத்துள்ள விவசாயிகள், 15 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து 30 எக்கருக்குக் குறையாத நிலப்பரப்புடன் கூட்டுப்பண்ணை நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

சர்வதேச பால் பண்ணைக் கழகம்

பெரும் பால் பண்ணைகள் கொண்ட நாடுகள் பங்கு பெறுகிற சர்வதேச பால் விநியோக கழகம் ஒன்றை, பால் பற்றாக் குறை நாடுகளுக்கு உதவும்வகையில் அமைக்க வேண்டுமென சர்வதேச பால் பண்ணை தொழில் சங்கத்தில், அதன் தலைவரான ஜியார்ஜ் ஓ. டிபானி யோசனை கூறியிருக்கிறாராம்.

பால் பண்ணைப் பொருள்கள் தேவைப்படும் நாடுகள், அந்த சர்வதேசக் கழகத்தில் ரொக்கமாகப் பணம் செலுத்தியோ, அல்லது வேறுபல மூலப்பொருள்களைக் கொடுத்தோ பெற்றுக்கொள்ளலாம் என்றும், கழகத்தில் அங்கம் வகிக்கும் பால் பண்ணைமிகுந்த நாடுகள் தங்களின் உபரி உற்பத்தியான பால் பண்ணைப் பொருள்களை விற்கவும் கழகமே பொறுப்பேற்குமெனவும் அவர் கூறியிருக்கிறாராம்.

கல்வி வளர்ச்சிக்கு ....

'போர்டு' நிறுவனம், 1951-ல் நிறுவப்பட்டதிலிருந்து இன்றுவரை கல்வி வளர்ச்சிக்காக மொத்தம் 2,59,52,810 டாலர் உதவி செய்துள்ளது.

இதில் 43 சதவிகிதம் தனிப்பட்டோர் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கும், 51 சதவிகிதம் பொதுப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுக்கும், எஞ்சியவை வேறு பல கல்வி நிறுவனங்களுக்கும் தரப்பட்டுள்ளனவாம்.

மலேயா இந்தியத் தொழிலாளர்கள்

கூலி உயர்வு பெறுவர்

சிங்கப்பூர், டிச. 22—

மலேயாவில் உள்ள தோட்டத் தொழிலாளிகளில் 3,30,000 பேர் அதிகக் கூலி பெறுவார்கள். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 91,000 அதிகமாகக் கூலி கொடுக்கப்படுமாம்.

தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களின் தேசிய யூனியனுக்கும், மலேயா தோட்ட முதலாளிகளின் கழகத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி, தொழிலாளர்கள் கூலி உயர்வு பெறுகின்றனர்.

ஒவ்வொரு தொழிலாளியும் 10 செண்டிலிருந்து 36 செண்ட் வரை கூலி உயர்வு பெறக்கூடும்.

மலேயா ரப்பரின் விலை அதிகமாக இருக்கிறதாம். கடந்த இரண்டு ஆண்டுகளில் இவ்வளவு அதிகமான விலை உயர்வு காணப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஒரு பவுண்டு ரப்பரின் விலை 85 மலேயா 'செண்ட்'கள் என்று சொல்லப்படுகிறது.

ரப்பரின் விலை 80 'செண்ட்'களுக்கு மேல் உயர்ந்தால் தொழிலாளர்கள் கூலி உயர்வு பெறுவார்கள் என்பது ஒப்பந்தம்.

மலேரியா ஒழிப்புக்கு புதிய ஒப்பந்தம்

14 - கோடி மக்களுக்கு பலன் கிடைக்கும்

இந்திய—அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின்படி ஒரு புதிய ஒப்பந்தம் புதுடில்லியில் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அடுத்த 12 மாதங்களில் இந்தியாவின் மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் பலன்கள் 13 கோடி 60 லட்சம் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்படும்.

இன்னும் 11 மலேரியா ஒழிப்புப் படைகள் உருவாக வேண்டுமென இவ்வொப்பந்தம் கூறுகிறது. இந்திய — அமெரிக்கத் திட்டத்தின்படி, 1952 முதல், இவ்வாறு உருவாகியுள்ள மலேரியா ஒழிப்புப் படைகள் இந்தப் பதினொன்றையும் சேர்த்து 136 - ஆகும். ஒவ்வொரு படையும் சுமார் 10 லட்சம் மக்களுக்கு மலேரியாவினின்று பாதுகாப்பளிக்கிறது.

இந்தப் புதிய ஒப்பந்தப்படி அமெரிக்கா ரூ. 2,10,32,000- பெறுமான சாதனங்கள் கொடுக்கிறது. இந்தியா ரூ. 2,20,00,000- செலவிடுகிறது.

கைத்தறித் தொழில் அபிவிருத்தி

மேலும் நிதி உதவி

கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக, இந்திய சர்க்கார், மானியமாகவும், கடனுதவியாகவும் மேலும் சுமார் ரூ. 7 லட்சம் அளித்துள்ளனர்.

அகில இந்திய கைத்தறி போர்டுக்கு மானியமாக அளிக்கப்பட்டுள்ள ரூ. 2,79,000-த்தில், அகில இந்திய கைத்தறி வாரத்தைக் கொண்டாட ரூ. 2 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

அர்த்தம் தெரியாத கோளாறு!

"வெள்ளைக்காரன் கொல்லத்தில் வந்து இறங்கியபோது அண்டிப் பருப்பை (முந்திரி பருப்பு) பார்த்து, 'இது என்ன?' என்று ஆங்கிலத்தில் கேட்டானாம். அங்குள்ள அண்டி (முந்திரி) சில்லரை வியாபாரிகள், 'விலைதான் கேட்கிறார்கள்' என்று நினைத்துக் கொண்டு, மலையாளத்தில் 'காசினெட்டு' (பொருள்: ஒரு காசுக்கு எட்டு முந்திரி பருப்பு) என்று பதில் கூறினார்களாம். உடனே வெள்ளைக்காரன், 'காஷ்யூனட்' என்று அதற்குப் பெயர் சூட்டிக் கொண்டானாம்.

அதுபோல, 'கங்காரு' என்ற மிருகத்தின் பெயரும் வேடிக்கையாக ஏற்பட்டது என்று சொல்லுவார்கள்.

'பாஷை தெரியாது' என்று, அவர்கள் பாஷையில், 'கங்காரு' என்று சொன்னதை, வெள்ளைக்காரர்கள் அந்த மிருகத்துக்கே 'கங்காரு' என்று பெயர் போட்டுவிட்டார்கள்."

— தினமலர்' 21—12—54 தலையங்கப் பகுதியில்.

உலிபுரம் தி. மு. கழக ஆண்டு விழா

கழகத் தோழர்களின் விடுதலை உணர்வு

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, பொன்னம்பலனார், மதியழகன் சொற்பொழிவு

21—12—54 செவ்வாய் மாலை 6 மணிக்கு, உலிபுரம் தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முக்கிய இடமான சாவடி மைதானம் கழகக் கொடிகளாலான தோரணங்களாலும், வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கூட்டத்திற்கான மேடை மின்சார விளக்குகளால் அமைக்கப்பட்டு, மேடையின் முகப்பிலே, வண்ணத் திராவிடத்தின் உரு அமைத்து, அதிலே பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் உருவத்தைப் பதித்து, மின்சார விளக்குகளால் பொருத்தப்பட்டிருந்தது. எவரும் எதிர்பாராத அளவில், ஆண்டு விழா வெகு சிறப்பாக இவ்வூரில் நடைபெற்றது. கழகத் தோழர்களின் விடுதலை உணர்வைக் குறிப்பிடுவதாயிருந்தது. வெளியூர்களிலும், உள்ளூரிலுமிருந்து சுமார் எட்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் குழுமியிருந்தனர். துணைச் செயலாளர் மு. அறிவாபுதன் முன்மொழிய, உ. ச. குறள்நிதி வழிமொழிய பெத்தநாயக்கன் பாளையம் தோழர் எம். குப்புசாமி தலைமை தாங்கினார்.

சீரங்கம் தோழர் அழகிரி சிறந்த இன்னிசை வழங்கினார்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன், அண்ணாதுரை ஆகியவர்கள் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் முதலியவைகளைக் குறித்தும், காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்டுவரும் அடக்குமுறை கொடுமைகள் பற்றியும், தி. மு. கழகத்தின் லட்சியக் கொள்கைகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கும், மற்ற தோழர்கட்கும் தம்மம்பட்டி, ஆத்தூர், முல்லைவாடி, கீரிப்பட்டி, மல்லியகரை, ஆனையாம்பட்டி, சிங்கபுரம் முதலிய கழகங்களின் சார்பாக மலர் மாலைகளும், வரவேற்பிதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

தோழர் வ. உ. குறள்நிதி, அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், சுமார் எட்டாயிரம் மக்கள் வசிக்கும் உலிபுரத்திலிருந்து வேறு ஊர்களுக்குச் செல்ல வசதியான பாதையும், போக்குவரத்துச் சாதனங்களும் கிடையாதாகையால், உடனடியாக இவ்வூருக்கு நல்ல பாதை வசதி செய்து தருமாறு சேலம் மாவட்டக் கழக தலைவரையும், சென்னை மாநில அரசினரையும் கேட்டுக்கொண்டதுடன், நாடகத் தடை மசோதாவைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★

நாகம்பட்டியில் தி. மு. கழக கொடியேற்று விழா

21—12—54 இரவு 6-30 மணிக்கு நாகம்பட்டியில் தி. மு. கழகக் கொடியை பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் ஏற்றி வைத்தார்.

நாகை இளைஞர் முன்னேற்ற மன்றம்

19—12—54 இரவு 7-30 மணியளவில், தோழர் ஆர். முனியாண்டி தலைமையில் நடைபெற்ற மன்ற நிர்வாகிகள் தேர்தல் கூட்டத்தில், பி. அய்யம்பெருமான் தலைவராகவும், ப. இராமையா துணைத் தலைவராகவும், ப. ச. உ. சேது செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், சென்னை நாடகச் சட்டத்தையும், கடைச் சிப்பந்திகளின் சட்டத்தையும் சர்க்கார் திருத்துவதைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெயர் சூட்டல்

சென்னை முத்தியாலுப்பேட்டை முத்தமிழ் மன்ற உறுப்பினர் தோழர் நா. நாகரத்தினம் அவர்கள் ஆண் குழந்தைக்கு கடந்த 5—12—54ல், தோழர் மு. கருணாநிதி அவர்களால் "அழகிரி" என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

கரும்பு சாகுபடி

நடப்பு ஆண்டில், கரும்பு சாகுபடி விஸ்தீரணம் 36,17,000 ஏகராவும், கரும்பு உற்பத்தி 4,74,69,000 டன்னுமாக இருக்குமென்று தெரியவருகிறது.

இந்தியா-பிரிட்டன் வர்த்தகம்

நடப்பு ஆண்டில், முதல் பத்து மாதங்களில் (ஜனவரி - அக்டோபர்) பிரிட்டன் ஏற்றுமதி செய்த இயந்திர சாதனங்களில் மூன்றிலொரு பங்கு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது. இவற்றில் மண்வாரிகளும், டிராக்டர்களும், நீர் இறைக்கும் 'பம்பு'கள் முதலிய சாதனங்களுமாகும். இவற்றின் மதிப்பு சுமார் 2,39,000 பவுன்களாகும்; மொத்தம் இறக்குமதி மதிப்பு சுமார் 3,61,42,000 பவுன்கள்.

இரசாயனப் பொருள்கள், வர்ணம், மருந்து, சாயம், இரசாயன எரு ஆகியவற்றை சுமார் 12,51,000 பவுன்களுக்கு இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது.

அக்டோபர் மாதத்தில் பிரிட்டனிலிருந்து இந்தியா இறக்குமதி செய்த முக்கியப் பொருள்களாவன:—

மோட்டார் - இரயில் வண்டிகள் - உபகரணங்கள்: 6,73,000 பவுன்கள்; பெட்ரோலும் அதைச் சார்ந்த பொருள்களும்: 2,74,000 பவுன்கள்; இரும்பு: 5,05,000 பவுன்கள்; செயற்கை நார் 1,11,000 பவுன்கள்; கம்பள நூல்: 4,37,000 பவுன்கள்; உலோகப் பொருள்கள் 3,72,000 பவுன்கள்.

ஜனவரி—அக்டோபர் மாதங்களில் இந்தியாவிலிருந்து பிரிட்டன் 20,24,488 அந்தர் தேயிலையை இறக்குமதி செய்திருக்கிறது; இதன் மதிப்பு 4,73,52,000 பவுன்கள்.

மற்ற முக்கியப் பொருள்கள் வருமாறு:—சணல், கயிறு வகை: 1,36,37,000 பவுன்கள்; தோல், தோலாலான பொருள்கள்: 1,08,75,000 பவுன்கள்; கம்பளி ரோமம்: சுமார் 42,50,000 பவுன்கள்: பருத்தி: 22,29,000 பவுன்கள்.

அக்டோபர் மாதத்தில் மட்டும் பிரிட்டன் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தவை வருமாறு:—

புகையிலை: 1,90,000 பவுன்கள்; எண்ணெய், கொழுப்பு வகைகள்: 2,23,000 பவுன்கள்; மாங்கனீஸ் கனிப் பொருள்: 1,22,000 பவுன்கள்.

ஜனவரி—அக்டோபர் மாதங்களில் பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியான பொருள் மதிப்பு: 9,81,75,000 பவுன்கள்; இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு 10,66,08,000 பவுன்கள்.

தேசீய வருமானம் அதிகரிப்பு!

முந்திய ஆண்டைவிட 1951—52-ல், இந்தியாவின் தேசிய வருமானம் ரூ. 460 கோடி அதிகரித்திருக்கிறதாம்.

தேசிய வருமான கமிட்டி என்ற மத்திய நிதி இலாகாவின் பிரிவு ஆறு மாதங்கட்கு முன், மத்திய புள்ளிவிவர சேகரிப்பு நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. அந்த நிறுவனம்தான் இப்போது இந்தப் புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது.

1951—52-ல், அந்த விபரப்படி, மொத்த வருமானம் 9,990 கோடி ரூபாயாக இருந்ததாம். 1950-51ல் இருந்ததைவிட அது 460 கோடி அதிகம் என்றும் கூறப்படுகிறது

மதுரை-திருச்சி விமானப் போக்குவரத்து

மக்கள் சபையில் தகவல்

1955 ஜனவரி முதல் தேதியிலிருந்து இந்தியாவுக்குள் நான்கு விமானப்போக்கு வரத்து சர்வீசுகள் புதிதாக ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

1 சென்னை-திருச்சி-மதுரை-திருவனந்தபுரம்-கொச்சி-கோவை-பெங்களூர்-சென்னை.

2. டெல்லி-ஆக்ரா-குவாலியர்-போபால்-ஆமதாபாத்-பம்பாய்.

3 டெல்லி-ஜோத்பூர்-போபால்-ஆமதாபாத்-ராஜ்கோட்.

4. சென்னை-பெங்களூர்-கோவை-கொச்சி-திருவனந்தபுரம்-சென்னை.

இப்படிப் பல ஊர்களையும் இணைக்கும் புதிய மார்க்கங்களில் விமானப் போக்குவரத்து அமையும் என்று அவர் தந்துள்ள தகவல் தெரிவிக்கிறது

இந்த வழிகளில் இப்போதுள்ள 'டகோடா' ரக விமானங்களே உபயோகிக்கப்படும். ரூ. 74.25 லட்சம் செலவில் வாங்க திட்டமிட்டுள்ள எட்டு 'ஹெரான்' ரக விமானங்கள் வந்து சேர்ந்ததும், அவை, இந்த 'டகோடா' விமானங்களுக்குப் பதிலாக உபயோகிக்கப்படும். அவை அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

"விமானப் போக்குவரத்து வசதி எல்லா மாவட்டத் தலைநகரங்களுக்கும் கிடைக்குமாறு செய்வது ஒருபோதும் சாத்தியமானதல்லவென்று நினைக்கிறேன்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தோழர்களே! பெங்களூர் வாரீர்!

மே. ஜெர்மனி ஆயுதபாணியாவதை பிரெஞ்சு சட்டசபை எதிர்க்கிறது

'நித்திய கண்டம்—பூரண ஆயுள்' என்ற நிலையில் பிரதமர் மெண்டே பிரான்ஸ்!

பாரிஸ், டிச. 25—

மேற்கு ஜெர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்குவது என்ற ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென பிரெஞ்சு தேசிய சட்டசபை நிராகரித்துவிட்டிருக்கிறது. ஒப்பந்தத்திற்கு ஆதரவாக 259 வாக்குகளும், எதிராக 280 வாக்குகளும் பதிவாயின.

இதை ஒரு நம்பிக்கைப் பிரச்சினையாக்கி, தம் மீது நம்பிக்கை ஓட்டளிக்குமாறு பிரதமர் மெண்டே பிரான்ஸ் மீண்டும் கோருவார்.

மேற்கு ஜெர்மனியை வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் (நேட்டோ) சேர்ப்பதையும் அவர் ஒரு நம்பிக்கைப் பிரச்சினையாக்கியிருக்கிறார்.

[மேற்கு ஜெர்மானியரும் சேர்ந்த ஐரோப்பிய பொது இராணுவம் ஒன்று வகுப்பதற்கான ஒப்பந்தத்தையும் முன்பொரு முறை பிரெஞ்சு தேசிய சட்ட சபை நிராகரித்துவிட்டதும் குறிப்பிடத்தக்கது.]

★

நம்பவில்லையாம்!

அகஸ்டா, டிச. 25—

"மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவதை எதிர்த்து பிரெஞ்சு தேசிய சட்ட சபை வாக்களித்திருப்பது, பிரான்சின் முடிவான தீர்மானம் என்று நான் நம்பவில்லை," என்று, அமெரிக்க ஜனதிபதி ஐசனோவர் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்று கூறுகிறதாம்.

★

இத்தாலி அங்கீகாரம்

இத்தாலிய மக்கள் சபை பாரிஸ் ஒப்பந்தத்தை (மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குகிற) அங்கீகரித்திருக்கிறது. ஒப்பந்தத்திற்கு ஆதரவாக 335 வாக்குகளும், பாதகமாக 215 வாக்குகளும் பதிவாயினவாம்.

ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று மாதம் வரையில் அதை அமுல் நடத்தக்கூடாதென்ற ஒரு யோசனையை இத்தாலிய மேல் சபை நிராகரித்திருக்கிறது.

★

பிரிட்டனின் எச்சரிக்கை

லண்டன், டிச. 25—

"பிரான்ஸ், பாரிஸ் ஒப்பந்தத்தை நிராகரித்துவிடுவதினாலேயே மேற்கு ஜெர்மனி ஆயுதபாணியாவதைத் தடுத்துவிட முடியாது; ஆனால், பிரான்சு, அங்கு நிறுத்தி வைப்பதாகக் கூறியுள்ள விமானப் படையும், செய்வதாகக் கூறியுள்ள இராணுவ உதவியும் நிலைப்பது என்பது, அது ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதைப் பொறுத்திருக்கிறது,"

என்று, பிரிட்டன், பிரான்சை எச்சரித்திருப்பதாகக் கூறப்படுகிறது

மேற்கு வங்க மாணவர்களின் தென் இந்திய சுற்றுப்பயணம்

கலவரத்தினல் கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது

முன்னாள் கல்விக் குழுவினர் மீது சந்தேகம்

கல்கத்தா, டிச. 24—

திறமையில்லை என்றும், கடமை செய்யத் தவறி அலட்சிய மனோபாவத்துடன் நடந்துகொண்டனர் என்றும் மேற்கு வங்க சர்க்காரினல் நீக்கப்பட்ட நடுத்தர கல்விக்குழுவைச் சேர்ந்தவர்களில் சிலர் கலவரம் செய்து, மேற்கு வங்க மாணவர்களின் தென்னிந்திய சுற்றுப்பயணத்தைத் தடுத்துவிட்டனர் என்று தெரிகிறது.

மேற்கு வங்கத்தில் இப்போதுள்ள நடுத்தர கல்விக் குழுவினர், 500 மாணவர்கள் தென் இந்திய சுற்றுப்பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்தனர். அவர்களில் 64 மாணவர்களும், 64 பெண் மாணவிகளும் முதல் பிரிவாக இன்று கல்கத்தாவைவிட்டு புறப்பட இருந்தனர்.

அனைவரும் வண்டியில் ஏறியதும், கீழே நின்ற சிலர், மாணவர்கள் பிரயாணம் செய்யும் வண்டி பாதுகாப்பற்ற தன்மையில் இருக்கிறதென்றும், ஜன்னல்களில் கம்பிகள் இல்லை என்றும், பிளாட்பாரத்தில் நின்ற கல்விக் குழு பிரதிநிதிகளிடம் ஆட்சேபித்தனராம். தங்கள் கோரிக்கையை கல்விக் குழுவினர் ஒப்ப மறுக்கவே, அவர்கள், பின்பு, மாணவர்களின் பெற்றோர்களிடம் இது பற்றி எடுத்துரைத்தார்களாம். பெற்றோர்கள் இது பற்றி கவலையின்றி, ஆசிரியர்கள் பொறுப்பில் மாணவர்களை ஒப்படைத்துவிட்டனர்.

தங்கள் முயற்சி தோல்வியுற்றதைக் கண்ட விஷமிகள், வண்டியில் ஏறி, வண்டி புறப்பட்டதும், அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து, வண்டியை நிறுத்திவிட்டனராம்.

விஷமிகளின் இச்செய்கையை வெறுத்த கல்விக் குழுவினர், கடைசி நேரத்தில் சுற்றுப் பிரயாணத்தை ரத்து செய்துவிட்டனர்.

இந்த மாணவர்கள், சென்னை, மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி, காஞ்சீபுரம், இராமேஸ்வரம், புதுச்சேரி, தனுஷ்கோடி, மதுரை, திருநெல்வேலி, திருச்செந்தூர், திருவனந்தபுரம், குமரிமுனை ஆகிய இடங்களுக்கு செல்ல ஏற்பாடுகள் நடைபெற்றிருந்தன.

இந்த நிகழ்ச்சி பற்றி அதிகாரபூர்வமான அறிவிப்பு எதும் இல்லை என்றாலும், மேற்கு வங்க முன்னாள் நடுத்தர கல்விக் குழுவைச் சேர்ந்தவர்களும், அதில் பணியாற்றிய சில முக்கியஸ்தர்களுந்தான் இதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

ரஷ்ய உதவியுடன்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

சோவியத் நிபுணர்கள் இதுவரை வங்காளம், பீகார் மத்தியப் பிரதேசம், சென்னை, மைசூர் ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ளனர்.

சோவியத் நிபுணர்கள் தங்கள் முடிவை இன்னும் தீர்மானிக்கவில்லையாம்.

சேலத்தில் இரும்பு கிடைப்பது பற்றியும், நெய்வேலி நிலக்கரி பற்றியும் சோவியத் நிபுணர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

முன்பு ஜெர்மன் நிபுணர்கள் தெரிவித்த முடிவுகளையும், ரஷ்ய நிபுணர்கள் பரிசீலிப்பார்களாம்.

சோவியத் நிபுணர்களின் சுற்றுப் பிரயாண செலவு முழுவதையும் சோவியத் சர்க்காரே ஏற்றுக்கொள்ளப்படும் என்று அமைச்சர் கூறினர்.

மற்றொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், 'ஐதராபாத்தில் எஃகுத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பது அவ்வளவு அவசியம் என்று சர்க்கார் கருதவில்லை" என்றார்.

உத்தேச தொழிற்சாலையைபெல்லாரியில் நிறுவுமாறு மைசூர் சர்க்கார் கேட்டிருக்கிறதாம்.

கழகக் கூட்டம்

★

கோவாண்டகுறிச்சி
27—12—54 திங்கள் மாலை
தலைவர்: ஆ. துரைராசன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
அன்பில் தர்மலிங்கம்
தம்புசாமி

திருக்குறள் வகுப்பு

26-12-54 காலை 10 மணிக்கு, சென்னை, மண்ணடி, எண் 94-95, புதுத் தெரு. இராசமல்லனர் பாடசாலையில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில் தோழர் கி. முருகேசனர் பேசுவார்.

* * *

26-12-54 காலை 10 மணிக்கு, சென்னை, இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோவில் தெருவில் உள்ள குறள் நெறிக் கழகத்தில் தோழர் இ. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

மதுரையில் குறள் மாநாடு

26-12-54 காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை, மதுரை சிகல் டாக்கீஸில், தோழர் எம். இராசமாணிக்கனர் தலைமையில் குறள் மாநாடு நடைபெறும். திறப்பாளர்: பாரதிதாசன்; குறள் படத் திறப்பாளர்: ஆ. கார்மேகம்; பேசுவோர்: க. அன்பழகன், க. திருமாறன், பு. கணேசன், மற்றும் பலர்.

தூத்துக்குடியில் தடையுத்தரவு

தி. மு. கழகம் பற்றிய தவறான செய்திக்கு மறுப்பு

"தூத்துக்குடியில் 'நகர போலீஸ் பிரிவு'ப்படி மேலும் 15 நாட்கள் (21—12—54 முதல்) நீடித்து தடையுத்தரவு பிறப்பித்து விளம்பரம் செய்யப்பட்டபோது, தி. மு. கழகத்தார் உண்ணாவிரதமிருப்பதாகக் கூறப்பட்டது முழுப் பொய்யாகும்."

"ஹார்வி மில்லில் பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் 17 பேர்களும் சேர்ந்து தனியாகக் குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் முடிவுப்படி தோழர்கள் வெ. அருணாசலம், ஞானஒளிவு ஆகிய இருவரும் உண்ணாவிரதமிருக்கிறார்கள். அந்தத் தோழர்கள் உண்ணாவிரதமிருப்பதற்கும், தி. மு. கழகத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது."

"திராவிட முன்னேற்றக் கழகம், யாரையும் உண்ணாவிரதமிருக்கும்படி முடிவு செய்யவுமில்லை; அந்தத் தோழர்கள் உண்ணாவிரதமிருப்பது பற்றியும் இன்றுவரையில் தி. மு கழகம் எந்தவித முடிவும் செய்யாதிருக்கிறது."

"நகரில் உள்ள போலீஸ் அதிகாரிகள், நகரில் நடைபெறும் சம்பவங்களைக்கூட சரிவர தெரிந்துகொள்ளாமல், தி. மு. கழகத்தைப் பற்றி தவறான செய்தி வெளியிடுவது முறையல்ல. இனிமேலும் இதுமாதிரி தவறான செய்திகள் வெளிவராமலிருக்கும்படி போலீஸ் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்," என்று நகர தி. மு. கழகச் செயலாளர் எஸ். நடராஜன் அறிவிக்கிறார்.

கடமையைச் செய்கின்றனர்

புதுடில்லி, டிச. 24—

இந்தியத் துணைக் கண்டத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள உருக்குத் தொழிற்சாலைகளில் ஒன்றை சேலத்தில் நிறுவவேண்டுமென தமிழ் நாட்டைச் சேர்ந்த 10 மக்கள் சபை உறுப்பினர்கள் இந்தியப் பேரரசிடம், மனு செய்துள்ளனராம்.

சோவியத் முன்னாள் அமைச்சர் சுட்டுக்கொல்லப்பட்டார்

சர்க்காருக்கு எதிராக சதி செய்தாராம்

அவருடன் மற்றும் மூவருக்கும் மரண தண்டனை

சோவியத் யூனியனின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான அபகுமோவ் என்பவருக்கும், அவருடன் மற்ற மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாம்.

டிச. திங்கள் 13-ந் தேதி முதல் 19-ந் தேதி வரை இவர்கள் லெனின்கிராட் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள் என்று சோவியத் செய்தி நிலையமான 'டாஸ்' அறிவித்திருக்கிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனராம்.

அபகுமோவுடன் சுட்டுக்கொல்லப்பட்ட மூவர் பின்வருமாறு:—

ஏ ஜிலியேனேவ்—இவர் துப்பறியும் இலாகாவின் முன்னாள் தலைவர்; சோவியத்தின் முக்கிய வழக்குகளைத் தயாரிக்கும் பொறுப்பில் இருந்தார்.

வி. ஐ. கோமரோவ், எம். டி. லிக்காச்சேவ் என்ற மற்ற இருவரும் அதே இலாகாவில் உதவி அதிபர்களாகப் பணிபுரிந்தனராம்.

மற்றும், எல். என். செர்னேவ், ஒய். எம். பிரோவர்மன் ஆகிய இரு அதிகாரிகளுக்கும் முறையே 15 ஆண்டும், 25 ஆண்டும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாம்.

அபகுமோவும், மற்றவர்களும், முன்பு சுட்டுக் கொல்லப்பட்ட பெரியாவின் துரோக வேலையைத் தொடர்ந்து செய்தார்களென்று சொல்லப்படுகிறது.

'சோவியத் கம்யூனிஸ்டு கட்சிக்கும், சோவியத் சர்க்காருக்கும் எதிராக இவர்கள் காரியமாற்றினர்,' என்று குற்றம் சாட்டப்பட்டது.

சுட்டுக் கொல்லப்பட்ட அபகுமோவ், 1946-ல், பெரியாவிற்குப் பின்னர் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1952-ம் ஆண்டில், இவர், கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று செய்திகள் வெளியாயினவாம்.

அபகுமோவ், சோவியத் வழக்குகளில் பிரசித்தி பெற்ற லெனின்கிராட் வழக்கை தயாரித்தவராம்.

இந்த வழக்கில், ஏராளமான கட்சித் தொண்டர்களும், சர்க்கார் ஊழியர்களும், சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டு சர்க்காருக்கு எதிராகக் கடும் குற்றம் இழைத்தார்கள் எனத் தவருகக் குற்றம் சாட்டப்பட்டனர் என்று டாஸ்' தெரிவித்திருக்கிறது.

அபகுமோவும், அவரது ஆதரவாளர்களும் சோவியத் சட்டத்திற்கு எதிராக பல வழக்குகள் தயாரித்தனர் என்று விசாரணையின்போது தெரிய வந்ததாம்.

1953-ம் ஆண்டு டிசம்பர் 23-ந் தேதியன்று பெரியாவும் அவரது ஆதரவாளர்கள் ஆறு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமாக செய்தி வெளியாயிற்று.

கம்யூனிஸ்டுகளை எதிர்க்க காங்கிரஸ் 'ஐக்கிய முன்னணி'

ஆந்திர தேர்தலில் புதிய கட்டம்

புதுடில்லி, டிச. 25—

ஆந்திராவில், எதிர்நோக்கியிருக்கும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து, காங்கிரஸ், பிரஜா, கிருஷிக் லோக் ஆகிய மூன்று கட்சிகளிடையேயும் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாயும், மூவருங்கொண்ட ஒரு 'ஐக்கிய முன்னணி' அமைத்துக்கொண்டு, தேர்தலில் போட்டியிடவும், தேர்தலுக்குப் பிறகு பொது வேலைத் திட்டத்தை பின்பற்றவுமான எல்லா அம்சங்களிலும் உடன்பாடு தோன்றியுள்ளதாம்.

இந்த மூன்று கட்சிகளும் தேர்தலுக்குப் பிறகு ஐக்கிய காங்கிரஸ் சட்டசபைக் கட்சி அமைத்துக் கொள்ளுமாம். அவர்கள் 'ஒரே தலைவரின் கீழ், ஒரே திட்ட அடிப்படையில், ஒழுங்காக வேலை செய்வார்கள் என்றும் இப்படிப்பட்ட ஒரு முன்னணி அமைந்திருப்பது, மகிழ்ச்சிக்குரியதென்றும் கூறப்படுகிறது.

ஆந்திர காங்கிரஸ் கட்சித் தலைவரான பி. கோபால் ரெட்டி வெளியிட்டுள்ள பட்டியலில் 136 அபேட்சகர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் காங்கிரஸ் 100, கிருஷிக் லோக் 23, பிரஜா 13 என்று பிரிக்கப்பட்டுள்ளது. மற்றும் 60 அபேட்சகர்கள் பெயர் இதே விகிதாசரத்தில் நிர்ணயிக்கப்படும் எனவும் திரு. கோபால் ரெட்டியார் குறிப்பிட்டிருக்கிறார்.

மொத்தமாகக் காங்கிரஸ் 130, கிருஷிக் லோக் 45, பிரஜா 20 இடங்களில் போட்டியிடுகின்றனராம்.

ஒரு கோடி டாலர் கடன் உதவி

உலக பாங்கி தருகிறது

முதலாளிகளின் தொழில் முயற்சிக்கு ஆதரவு

இந்தியத் துணைக் கண்டத்தில் தனிப்பட்டவர்களின் முயற்சியினல் தொழில்கள் பெருகுவதற்கு உதவும் பொருட்டு இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் இந்த மூன்று நாடுகளையும் சேர்ந்த தனிப்பட்ட முதலாளிகள் ஒன்று சேர்ந்து முதலீடு செய்து 'இந்திய தொழில் முதலீடு கடன் உதவி கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தையமைத்துள்ளார்கள்.

இதற்கு உலக பாங்கி ஒரு கோடி டாலர் கடன் கொடுத்துதவுவதென முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உலக பாங்கி இப்போது 7-வது முறையாக கடன் உதவுகிறது.

இதுவரை உலகபாங்கியிலிருந்து இந்தியா பெற்றுக்கொண்ட கடன் 12.67 கோடி டாலராகும்.

5 கோடி டாலர் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்திய தொழில் கடன் முதலீடு கார்ப்பரேஷனின் பாங்கிகளில் அமெரிக்காவைச் சேர்ந்த சில நிறுவனங்கள் 10 லட்சம் டாலர், பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் 20 லட்சம் டாலர், இந்தியர்கள் 70 லட்சம் டாலர் மதிப்புள்ள பங்குகளை வாங்குவர் எனவும் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,